**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம், கார்த்திகைத்திங்கள் 11 ம் நாள்

**இ.ம.எண். 623/2022**

**in**

**அ.வ.எண். 205/2022**

1. M.சின்னசாமி
2. K.சாமிநாதன்
3. P.சாமிநாதன்
4. D.பாலசுப்பிரமணி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. K.P.குமாரசாமி
2. K.K.அருண்சரணு

(Amended as per order in I.A.No.2/2024 dated 05.08.2024)

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 19.11.2025 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.தங்கமணி, B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.வடிவேல்சாமி, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும், வழக்காவணங்களையும் பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றத்தால் பகரப்படும்.

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மனுதாரர்கள் மனு/தாவா சொத்தில் அமைதியான முறையில் ஆண்டனுபவித்து வருவதை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளோ அவர்களின் ஆட்களோ எவ்விதத்திலும் இடைஞ்சலும் செய்யக்கூடாது என்றும் மனு/தாவா முடியும் வரை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பேரில் ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கி உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-</u>**

i) மனுதாரர்கள்/வாதிகள் மனு/தாவா சொத்தான தடத்தை பொதுவில் அனுபவித்து வரும் கூட்டுபாகஸ்தர்கள் ஆகும். 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதியின் தகப்பனார் ஆகும். எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் மனுதாரர்கள்/வாதிகளின் மனு/தாவா தடத்திற்கு அடுத்து உள்ள பூமி சொந்தக்காரர்கள் ஆகும். மனுதாரர்கள்/வாதிகள் குடியிருக்கும் க.ச. 885 பூமியிலிருந்து க.ச. 886, க.ச.887, க.ச.882 காலைகளில் அத்துக்குள் மனு/தாவா தடம் செல்கிறது. க.ச. 886, க.ச.887, க.ச.882 பூமிகள் ஆதியில் ஒரு பச்சியணகவுண்டர் மகன் முத்துசாமிகவுண்டர், ராமசாமிகவுண்டர் மக்கள் சாமியப்பகவுண்டர், கிட்டுசாமிகவுண்டர், ராமசாமிகவுண்டர் மக்கள் கிட்டுசாமிகவுண்டர், சாமியப்பகவுண்டர், முத்துசாமிகவுண்டர், சுப்பராயகவுண்டர் மகன் குழந்தசாமிகவுண்டர் ஆகியோர்களுக்கு பொதுவில் பாத்தியப்பட்டு பொது சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்ததில் பாகஸ்தர்கள் தங்களுக்குள் கடந்த 09.08.1988 ம் தேதியில் பாகக்கரார் செய்து கொண்டார்கள்.

ii) பாகக்கரார் செய்யும் பொழுதே க.ச. 885 பூமியில் இருந்து க.ச. 886 பூமியின் வடகோட்டு அத்தில் 23 லிங்ஸ் (15 அடி) அகலத்தில் கிழமேலாக க.ச. 887 காலை மேற்கோட்டு அத்து வரையிலும் அதன் தொடர்ச்சியாக க.ச. 887 காலையின் மேற்கோட்டு அத்தில் வடக்கே க.ச.882 காலை வரை பாகஸ்தர்கள் தடம் அமைத்து தங்களுக்குள் பாகம் பிரித்து அந்தப்படியே க.ச.885 காலையிலிருந்து கிழக்கே சென்று பின்பு க.ச.887 காலையில் வடக்கே 882 காலை வரை அவரவர் பாகங்களுக்கு பாகக்கரார் தேதியிலிருந்து மனு/தாவா A,B,C,D தடத்தின் வழியாக பாகஸ்தர்கள் வண்டி வகையறாக்கள் ஓட்டி நடந்து அனுபவித்து வந்துள்ளனர். மனு/தாவா தடம் நிலையான அத்துக்குள் அமைந்தும் பாகஸ்தர்கள் தங்களுக்குள் பொது தடமாக நடந்து ஆண்டனுபவித்து வந்துள்ளனர். மனு/தாவா தடத்தை பாகக்கரார் தேதிய பாகஸ்தர்கள் அனுபவித்து வந்து பின்னிட்டு அவர்களின் வாரிசுகளான மனுதாரர்கள்/வாதிகள் மனு/தாவா தடத்தை தங்களுக்குள் எந்தவித இடையூறும் இல்லாமல் அனுபவித்து வந்துள்ளனர். மனு/தாவா தடம் பொருத்து பாத்திய அனுபவத்தில் மனுதாரர்கள்/வாதிகள் தங்களுக்குள் எவ்வித இடையூறும் ஆட்சேபனையும் இருந்தது இல்லை.

iii) மனு/தாவா தடம் அமைத்துள்ள க.ச. 886 பூமியின் தொட்ட வடபுறமும் க.ச.887 காலையின் தொட்ட மேபுறமும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட க.ச.883 காலை பூமி உள்ளது. மனுதாரர்கள்/வாதிகள் பேரில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தங்கள் பூமியை மனுதாரர்கள்/வாதிகள் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சிப்பதாக பொய்யாக நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி அ.வ.எண். 21/2022 வழக்கு தாக்கல் செய்து மனுதாரர்கள்/வாதிகளுக்கு நீதிமன்ற சம்மன் சாரியாகி உள்ளது. மனுதாரர்கள்/

வாதிகள் தரப்பில் எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரர்கள்/வாதிகள் பேரில் தாவா நிலுவையில் உள்ளதை பயன்படுத்தி மனுதாரர்கள்/வாதிகளின் தாவா தடத்தை இடைஞ்சல் செய்து எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தங்கள் பூமியுடன் சேர்த்து ஆக்கிரமித்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கடந்த 10.09.2022 தேதியில் தாவா தடத்தில் அத்துமீறி நுழைந்து மனு/தாவா தடத்தின் வடபுறத்து மற்றும் மேபுற நிலையான அத்துக்களை அழித்து கம்பிவேலி அமைக்க எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் முயற்சி செய்தார்கள்.

iv) மனு/தாவா தடம் க.ச.886, க.ச.887 பூமி அத்துக்குள் அமைந்துள்ளது. மனு/தாவா தடத்திலோ க.ச.886, க.ச.887 பூமிகளில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு யாதொரு பாத்தியமும் அனுபவமும் எப்போதும் இல்லை. எனவே மனு/தாவாச் சொத்தில் மனுதாரர்கள்/வாதிகள் அமைதியான முறையில் ஆண்டனுபவித்து வருவதை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளோ அவர்களின் ஆட்களோ எவ்விதத்திலும் இடைஞ்சலும் செய்யக்கூடாது என்றும் மனு/தாவா முடியும் வரை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பேரில் ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கி உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

**<u>2) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரைச் சுருக்கம்:—</u>**

i) மனுதாரர்கள் மனு பொய்யானது, மோசடியானது, சட்டப்படி நிலைக்கதக்கதல்ல. இவ்வெதிர்மனுதாரர் இவ்வெதிருரையில் வெளிப்படையாக

ஒப்புக் கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவராவார்கள்.

ii) க.ச.883A, பு.ஏ.10.22 இதற்கு ரீ.ச.883/A5–ல் பு.ஏ.5.26 சென்ட் விஸ்தீரண பூமியும், இதர பூமிகளும் எதிர்மனுதாரர்களுக்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்டு இருந்து வந்ததை பொறுத்து கடந்த 07.11.2001–ம் தேதியில் பாகப்பிரிவினை செய்து கொண்டுள்ளார்கள். மேற்படி பாகப்பிரிவினையில் 1ம் பிரதிவாதிக்கு பிரிந்த C செட்டியூல் சொத்தில் ஒரு பகுதி சொத்தான ரீ.ச.883/A5 உள்ள பு.ஏ.5.26 விஸ்தீரண பூமி உள்ளது. மேற்படி பூமிக்கு தென்புறத்தில் க.ச.886 காலையும் கிழபுறத்தில் க.ச.887, க.ச.882 காலையும் உள்ளது. பாகப்பிரிவினைக்கு பின்னிட்டு ரீ.ச.883/A5ல் உள்ள சொத்தை தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருகிறார். ரீசர்வேபடி ரீ.ச.883/A5–ஆனது தனி உட்பிரிவாகி 1ம் பிரதிவாதி பெயரில் தனிப்பட்டாவும் வழங்கப்பட்டுள்ளது. ரீ.ச.883/A5ல் 1ம் பிரதிவாதியை தவிர வேறு யாருக்கும் எவ்வித பாத்தியமும் உரிமையும் அனுபவமும் கிடையாது.

iii) ரீ.ச.883/A5ல் 1ம் பிரதிவாதி பாகப்பிரிவினை காலத்திலேயே நான்கு பக்க அத்தாக வேலி அமைத்து தனிப்பட சுவாதீனத்திலிருந்து கடந்த 20 வருடங்களுக்கு மேலாக ஆண்டனுபவித்து வருகிறார். ரீ.ச.883/A5ல் கிழபுறம் மற்றும் தென்புறத்தில் வாதிகளுக்கு பூமி உள்ளது. 1ம் பிரதிவாதி பூமிக்கும் வாதிகளின் பூமிக்கும் இடையே கிழபுறம் தென்வடலாக பாதி அளவிற்கு கம்பிவேலியும், மீதி கிழுவன்வேலியும் அத்தாக உள்ளது. அதேபோல் ரீ.ச.883/A5ல் தென்புறத்தில் கிழமேலாக கம்பிவேலி 1ம் பிரதிவாதி அமைத்து ரீ.ச.883/A5 சொத்தை தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருகிறார் ரீ.ச.883/A5 சொத்திற்குள் வாதிகளுக்கு எவ்வித உரிமையும், பாத்தியமும்

அனுபவமும் கிடையாது. ரீ.ச.883/A5 சொத்தை வாதிகள் விலைக்கு கேட்க 1ம் பிரதிவாதி மறுத்துவிடவே வாதிகள் ஏதாவது ஒரு வகையில் ரீ.ச.883/A5 சொத்தை அடைய வேண்டி கடந்த 13.01.2022–ம் தேதி ரீ.ச.883/A5 சொத்திற்குள் அத்துமீறி நுழைந்து பிரதிவாதியின் அனுபவ சுவாதீனத்திற்கு இடையூறு செய்ய முற்பட்டதால் 1ம் பிரதிவாதி நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி அ.வ.எண்.21/2022 ஐ தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி வழக்கும் நிலுவையில் இருந்து வருகிறது. பிரதிவாதி அவரது பூமியான ரீச.883/A5 ற்கு தென்புற அத்தில் கிழமேலாக கம்பிவேலியும், மேற்படி பூமியின் கிழபுற அத்தில் தென்வடலாக பாதி தூரத்திற்கு கம்பிவேலியும் மீதி தூரத்திற்கு உயிருள்ள வேலியும் அமைத்து அனுபவித்து வருகிறார்.

iv) இந்நிலையில் மேற்படி இருவழக்குகளும் நிலுவையில் இருந்து வந்தபோது வாதிகள் கடந்த 24.09.2022ம் தேதி ரீ.ச.883/A5 தென்புறம் மற்றும் கிழபுறத்தில் அத்தாக அமைத்திருந்த கம்பி வேலிகளை சமட்டி, கடப்பாறையை கொண்டு உடைத்து சேதப்படுத்தி பிரதிவாதி பூமிக்குள் அத்துமீறி நுழைந்ததால் காங்கயம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து அது குற்ற எண்.471/2022 என நெம்பராகி வழக்கு விசாரணையில் இருந்து வருகிறது. வாதிகள் இந்த பிரதிவாதி பூமியை ஆக்கிரமிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் கம்பிவேலி கற்களை உடைத்து சேதப்படுத்தியுள்ளார்கள். வாதிகளுக்கு க.ச.886 காலையின் வடக்கோட்டிலும், க.ச.887 காலையின் மேற்கோட்டிலும் பூமி தடபாத்தியம் இருக்கும் நிலையில் வாதிகள் தடத்தை அகலப்படுத்தவேண்டி 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட ரீ.ச.எண்.883/A5 தென்புறபகுதியையும் மற்றும் கிழபுற பகுதியையும் ஆக்கிரமிக்கும் நோக்கில் செயல்பட்டு வருவதுடன் கம்பிவேலியை உடைத்து அக்கிரம செயலில் ஈடுபட்டுள்ளார்கள். எனவே ரீ.ச.883/A5 ன்

தென்புறமும், கிழபுறமும் ஆக்கிரமிக்கும் நோக்கில் இம்மனுவை தாக்கல் செய்திருப்பதால் இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே எதிருரையின் சுருக்கமாகும்.

3. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இருதரப்பு வாதங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

**5. தீர்வு:–**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மனுதாரர்கள்/வாதிகளின் தாவா தடத்தை இடைஞ்சல் செய்து எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தங்கள் பூமியுடன் சேர்த்து ஆக்கிரமித்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் தாவா தடத்தில் அத்துமீறி நுழைந்து மனு/தாவா தடத்தின் வடபுறத்து மற்றும் மேபுற நிலையான அத்துக்களை அழித்து கம்பிவேலி அமைக்க எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் முயற்சி செய்தார்கள் என்றும் மனு/தாவாச் சொத்தில் மனுதாரர்கள்/வாதிகள் அமைதியான முறையில் ஆண்டனுபவித்து வருவதை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளோ அவர்களின் ஆட்களோ எவ்விதத்திலும் இடைஞ்சலும் செய்யக்கூடாது என்றும் மனு/தாவா முடியும் வரை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பேரில் ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கி உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மனுதாரர்கள்/வாதிகள் கடந்த 24.09.2022ம் தேதி ரீ.ச.883/A5 தென்புறம் மற்றும் கிழபுறத்தில் அத்தாக அமைத்திருந்த கம்பி வேலிகளை சமட்டி, கடப்பாறையை கொண்டு உடைத்து சேதப்படுத்தி பிரதிவாதி பூமிக்குள் அத்துமீறி நுழைந்ததால் காங்கயம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு விசாரணையில் இருந்து வருகிறது என்றும் மனுதாரர்கள்/வாதிகள் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பூமியை ஆக்கிரமிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் கம்பிவேலி கற்களை உடைத்து சேதப்படுத்தியுள்ளார்கள் என்றும் வாதிகளுக்கு க.ச.886 காலையின் வடக்கோட்டிலும், க.ச.887 காலையின் மேற்கோட்டிலும் பூமி தடபாத்தியம் இருக்கும் நிலையில் வாதிகள் தடத்தை அகலப்படுத்தவேண்டி 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட ரீ.ச.எண்.883/A5 தென்புற பகுதியையும் மற்றும் கிழபுற பகுதியையும் ஆக்கிரமிக்கும் நோக்கில் செயல்பட்டு வருவதுடன் கம்பிவேலியை உடைத்து அக்கிரம செயலில் ஈடுபட்டுள்ளார்கள் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

7. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள் மீது தாவா சொத்தான தாவா ஏபிசிடி தடத்தை மனுதாரர்கள்/வாதிகள் அனுபவிப்பதை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனுவானது தாவா தடமான மனு/தாவா சொத்தை மனுதாரர்கள் அனுபவித்து வருவதை எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் எவ்விதத்திலும் இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று மனு/தாவா முடியும் வரை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பேரில் ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை

வழங்கி உத்தரவிடக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும்போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் நீதிமன்ற ஆணையரை நியமித்து சர்வேயர் உதவியுடன் தாவா/மனு சொத்தை அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய அனுமதி கோரி இ.ம.எண்.3/2025 என்ற மனுவானது தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு கடந்த 25.10.2025 அன்று இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது.

8. வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது தாவா சொத்துக்களான க.ச.எண்.886, 887, 882 ஆகிய பூமிகளின் மேல்புறம் மற்றும் வடபுறம் எதிர்மனுதாரர்களின் பூமியான க.ச.எண்.883 அமைந்துள்ளது என்பது தெரிய வருகிறது. மனுதாரர்கள் தரப்பில் தாவா தடமான ஏபிசிடி தடம் க.ச.எண்.887, 886, 882 காலையில் நிலையான அத்துக்குள் கிழமேலாகவும் தென்வடலாகவும் அமைந்து மனுதாரர்களால் அனுபவம் செய்து வரப்படுகிறது என்றும் தாவா ஏபிசிடி தடத்தை ஆக்கிரமிப்பு செய்ய எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் முயற்சி செய்தார்கள் என்றும் க.ச.எண்.886, 887, 882 பூமிகளில் எதிர்மனுதாரர்களுக்கு எந்த பாத்தியமும் அனுபவமும் இல்லை என்றும் சொல்லப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்திற்கு வடபுறமும் மேல்புறமும் அமைந்துள்ள 1ம் எதிர்மனுதாரரின் பூமியான ரீ.ச.எண்.883/A5 பூமியின் தென்புறத்தில் கிழமேலாக கம்பிவேலி அமைத்தும் கிழபுறம் தென்வடலாக பாதி அளவிற்கு கம்பிவேலியும் மீதி கிழுவன்வேலியும் அமைத்தும் 1ம் எதிர்மனுதாரர் தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வருவதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

9. மேலும் மனுதாரர்கள் தரப்பில் கடந்த 10.09.2022 தேதியில் தாவா தடத்தில் வடபுற மற்றும் மேல்புற நிலையான அத்துக்களை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அழித்து கம்பிவேலி அமைக்க முயற்சி செய்தார்கள் என்று சொல்லப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் தடத்தை அகலப்படுத்தவேண்டி 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட ரீ.ச.எண்.883/A5 தென்புற பகுதியையும் மற்றும் கிழபுற பகுதியையும் ஆக்கிரமிக்கும் நோக்கில் செயல்பட்டு வருவதுடன் கம்பிவேலியை உடைத்து அக்கிரம செயலில் ஈடுபட்டுள்ளார்கள் என்றும் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி இரு தரப்பு சங்கதிகளைப் பொறுத்தும் தாவா ஏபிசிடி தடத்தின் அனுபவம் பொறுத்தும் அசல் வழக்கில் இரு தரப்பு சாட்சியங்களுக்கு பின்னிட்டு இறுதியாக தீர்மானிக்க இயலுமே தவிர இம்மனுவில் மேற்படி சங்கதிகளைப் பொறுத்து இம்மனுவில் தீர்மானம் செய்ய இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

10. எனவே மேலேகண்ட பரிசீலனைகள் மற்றும் விவாதங்களின் அடிப்படையில் அசல் வழக்கானது மனுதாரர்களால் தாவா ஏபிசிடி தடத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தாவா ஏபிசிடி தடத்தைப் பொறுத்தும் அதன் அனுபவத்தைப் பொறுத்தும் அசல் வழக்கில் இரு தரப்பு சாட்சியங்களுக்கு பின்னிட்டு இறுதியாக தான் தீர்மானம் செய்ய இயலும் என்பதாலும் இம்மனுவில் மேற்படி சங்கதிகளைக் குறித்து தீர்மானிக்க இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு அசல் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உகந்த நிலையில் உள்ளதாலும் மேலேகண்ட பரிசீலனைகளின் அடிப்படையிலும் இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,**

இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.11.27 19:41:09 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :- இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : - இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.11.27 19:41:13 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.